சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

EA 2/2026 in EP 58/2025 in HMOP 98/2022

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 27ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திருமதி. லோகநாயகி | நாள் 27.07.2026 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் மனுவில் மனுதாரர். HMOP 98/2022 வழக்கில் வ.வி.1/2024 ல் பகரப்பட்ட உத்தரவுப்படி எதிர்மனுதாரர் மாதம்தோறும் ரூ.10,000 எனக்கு தர வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் அந்த தொகையை தராத காரணத்தினால் நான் இந்நீதிமன்றத்தில் நி.ம. 58/2025 எனும் நிறைவேற்று மனுவை தாக்கல் செய்தேன். அம்மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரரை கைது செய்து சிறையில் அடைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனை எதிர்த்து எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு 2829/2026 தாக்கல் செய்து அதில் நிபந்தனைகளின் பெயரில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ரூ.1,50,000 ஐ இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், அதனை இடைக்கால பராமரிப்பு தொகையாக நான் அதனை பெற்று கொள்ளலாம் என்று உத்தரவு பகரப்பட்டது. அதன் பெயரில்

எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மேற்கண்ட தொகையை வைப்பீடு செய்துள்ளார். அந்த தொகையை எனக்கு அளித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை இல்லை.**